# கிராமின் கிருஷி மவுசம் சேவா

இந்திய வானிலை துறை

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

**கோவை, தமிழ்நாடு**

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 20-06-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-20 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-06-21 | 2023-06-22 | 2023-06-23 | 2023-06-24 | 2023-06-25 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 10.0 | 3.0 | 3.0 | 3.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( 0செ ) | 36.0 | 35.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (0 செ ) | 27.0 | 26.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 16 | 16 | 14 | 16 | 18 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிக பட்ச வெப்ப நிலையானது 35 முதல் 36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலையானது 25-27 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 40 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 14 முதல் 18 கிலோ மீட்டர் வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் ஜூன் 25 முதல் ஜூலை 01 வரை மழை இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாகவும் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| கால்நடைகளில் புற ஒட்டுண்ணியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் இதனை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி நீக்க மருந்து கொண்டு தூய்மைப்படுத்தலாம். |

**தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:**

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்து பாகத்தில் (கொண்டை) மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவுள்ள அந்து உருண்டையை இட்டு மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் கன்றுகளுக்கு மட்டை இடுக்குகளில் வைக்கவும்.ஒரு மண்பானையில் 5 லிட்டர் நீருடன் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். |
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது நிலவிவரும் வானிலையின் காரணமாக கால்நடைகளில் அயர்ச்சி ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால் கால்நடை கன்று வளர்ப்போர் தங்களின் கன்றுகளுக்கு நாள் ஒன்றுக்கு 30 கிராம் தாது உப்புக்கலவை கொடுக்க வேண்டும். மேலும் கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் மிக அவசியம். |

**கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:**

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
| --- | --- |
| கோழி | நிலவும் வானிலையால் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் அறிகுறிகள் கோழிகள் தலையை ஒரு பக்கமாக சாய்த்து கொள்ளுதல், கழிச்சல் மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு ஏற்படும். இதனை தவிர்க்க கோழிகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தடுப்பூசி போடவும். |